<u>**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**</u>

<u>**அ.வ.எண்.514/2021**</u>

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை **பி.வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெரியசாமி | தொழில் | Private Job |
| த/பெ | அங்கப்பகவுண்டர் | கிராமம் | தாராபுரம் |
| வயது | 65 | தாலுகா | தாராபுரம் |
| | | மாவட்டம் | திருப்பூர் |

<u>**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**</u>

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. 1 முதல் 4 பிரதிவாதிகள் பல கல்வி நிறுவனங்களை நடந்தி வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி கல்வி நிறுவனங்களை ஒன்று முதல் நான்கு பிரதிவாதிகள் தான் நிர்வகித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நிர்வாக திறன் மற்றும் ஆளுமைத் திறன் உள்ளது என்று சொன்னால் இருக்கலாம். 1 முதல் 4 பிரதிவாதிகள் குடும்பத்தில் இருந்து சிலர் எம்எல்ஏ ஆகவும், எம்பி ஆகவும் பல்வேறு காலகட்டங்களில் இருந்திருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். அவர்களுக்கு பல இடங்களில் பல நிலங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி காரணங்களால் 1 முதல் 4 பிரதிவாதிகள் நல்ல அனுபவமும் நிர்வாக திறனும் கொண்டவர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி நிலங்களை அனுபவிப்பதில் 1 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவம் வாய்ந்த நபர்கள் என்று சொன்னால் 1–ம் பிரதிவாதி மட்டும் அனுபவம் வாய்ந்த நபர், மற்ற பிரதிவாதிகளுக்கு விவசாய நிலங்களை பொறுத்து ஈடுபாடு இல்லை.

2. இந்த வழக்கு தொடர்பான உடன்படிக்கையிலோ, வேறு ஆவணங்களிலோ நான் சாட்சியாக கையெழுத்து இடவில்லை என்று சொன்னால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளின் கல்வி நிறுவனங்களில் நான் நிர்வாகப் பணிகளை பார்த்து வந்தேன் என்று சொன்னால் அதையும் பார்த்தேன் 1–ம் பிரதிவாதியின் தனிப்பட்ட உதவியாளராகவும் இருந்தேன். நான் 1–ம் பிரதிவாதியின் தனிப்பட்ட உதவியாளர் என்பதை காட்ட ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல உள்ளது அதை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 7–வது பத்தியில் குறிப்பிட்டுள்ள மூத்த வழக்கறிஞரின் பெயர் வழக்கறிஞர் குருநாதன் ஆகும். மேற்படி சட்டக் கருத்துறை 2014 ஆம் வருடம் பெறப்பட்டது. மேற்படி சட்டக் கருத்துறையை வாதியிடம் கொடுத்ததற்கோ அதை அவர் படித்துப் பார்த்ததற்க்கோ ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஆறாவது பத்தியில் குறிப்பிட்டுள்ள சர்வே தெரிந்த நபரின் பெயரும் விலாசமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் தொடர்பான பத்திரங்கள் எதிலும் நான் சாட்சிகையெழுத்து போட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல போட்டு இருக்கிறேன். அவ்வாறு நான் சாட்சிகையெழுத்து போட்டதாக கூறும் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. வாதி, பிரதிவாதிகளின் சொத்து சம்பந்தமான நடவடிக்கைக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல தொடர்பு உள்ளது. ஆவணங்கள் மற்றும் வில்லங்கச் சான்று, சட்டக்கருத்துறை ஆகியவற்றை வாதிக்கு வேண்டிய சோமசுந்தரம் என்பவர் மூலம் நான் கொடுத்தேன். வில்லங்கச் சான்று வழக்கு டீலிங்கிற்கு பிறகு வாங்கப்பட்டது. வில்லங்கச்சான்றோ சட்ட கருத்துரையோ எந்த காலகட்டத்திலும் நான் கூறியதைப் போல கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா உடன்படிக்கை குறித்த வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையேயான

நடவடிக்கைகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் நான் பிரதிவாதிகளின் கல்வி நிறுவனங்களில் கடந்த 35 வருடங்களாக பணிபுரிந்து வருவதால் பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் நிலம் தொடர்பான நடவடிக்கைகளில் எனக்கு எப்போதும் பங்கு இருந்ததில்லை என்பதால் தான் என்னால் கையெழுத்து செய்யப்பட்டதாக கூறப்படும் ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் சாட்சியத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கும் பொருட்டு நான் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இடங்க தவறான சாட்சியத்தை பதிவு செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 1–ம் பிரதிவாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.27 19:49:33 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.